# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/03 - 2023 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2023.08.14

*2345/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உபபிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
*2023 ஆம் ஆண்டு ஓகத்து 14 ஆந் திகதி.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2023 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

*2.1* இவ் ஒழுங்கு விதிகளின் கட்டாயப் பகுதியான கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான உள்ளீடுகள்,மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளின் **I ஆம் அட்டவணையில்** இருந்து நீக்கப்படுகின்றது.

| | நிரல் I<br>**இ.மு தலைப்பு** | நிரல் II<br>**இ.மு குறியீடு** | | நிரல் III<br>**விபரம்** | நிரல் IV<br>**தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் அ** | நிரல் V<br>**தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் ஆ** |
|---|---|---|---|---|---|---|
| **198** | **87.02** | | | **ஓட்டுபவர் அடங்கலாக, பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள்** | | |
| | | 8702.10 | - | பொறிமுறை அழுத்த உள்ளக எரிநிலை ஆடு தண்டு இயந்திரத்தினை மாத்திரம் கொண்ட (டீசல் அல்லது பகுதியளவில்-டீசல்): | | |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயதுவந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், பத்துவருடங்களுக்கு மேற்படாதவை: | | |
| | | 8702.10.55 | ---- | பிற, 5 வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |
| | | 8702.10.59 | ---- | பிற | **TS** | |
| | | | --- | பிற,பத்து வருடங்களுக்கு மேற்படாதவை: | | |
| | | 8702.10.75 | ---- | பிற,ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |
| | | 8702.10.79 | ---- | பிற | **TS** | |
| | | | | | | |
| **200** | **87.04** | | | **பொருட்களைக் கொண்டுசெல்லுவதற்கான மோட்டார் வாகனங்கள்.** | | |
| | | 8704.10 | - | நெடுஞ்சாலைகளற்ற இடங்களில் உபயோகிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட டம்பர்கள் | **TS** | |
| | | | - | பிற,பொறிமுறை அழுத்த உள்ளக எரிநிலை ஆடு தண்டு இயந்திரங்களுடனான பிற (டீசல் அல்லது அரை-டீசல்) : | | |
| | | 8704.21 | -- | மொத்த வாகன நிறையானது 5 தொன்களுக்கு மேற்படாதவை : | | |
| | | | - | விசேட பாவனை தொடர்பிலான தாங்கிகள் /பவுசர்கள் மற்றும் ட்றக்குகள் | | |
| | | 8704.21.11 | ---- | பாலைக் கொண்டு செல்லுவதற்கான துருப்பிடிக்காத இரும்பிலான தாங்கிகளைக் கொண்ட தாங்கிகளும் / பவுசர்களும், ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |

| நிரல் I<br>இ.மு தலைப்பு | நிரல் II<br>இ.மு குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் அ | நிரல் V<br>தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் ஆ |
|---|---|---|---|---|---|
| | | --- | இயந்திரங்கள் மற்றும் கெப்களுடன் பொருத்தப்பட்ட அடிச் சட்டம் | | |
| | 8704.21.33 | ---- | 8704.21.51 ஆம் தேசிய உப தலைப்புகளின் கீழான வாகனங்களுக்காக, நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | | --- | பொருட்களையும் மற்றும் நபர்கள் அமரும் அறைக்குமாக வேறாக்கப்பட்டுள்ளதுமான பிற வாகனங்கள், நபர்கள் அமரும் அறையில் பிற பாவனைக்காக மாற்றத்தக்க மேலதிக இடவசதியுடன் அல்லாத, ஓட்டுனர் அடங்கலாக 3 நபர்களை (வயதுவந்தவர்கள்) அல்லது அதற்குக் குறைந்த நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நபர்கள் அமரும் அறை, சரக்குச் சுமையானது 2000 கி.கிராம் அல்லது அதற்கு மேற்பட்டவை : | | |
| | 8704.21.51 | ---- | நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | 8704.22 | -- | மொத்த வாகன நிறையானது 5 தொன்களுக்கு மேற்பட்டவை ஆனால் 20 தொன்களுக்கு மேற்படாதவை : | | |
| | | --- | பாலைக் கொண்டு செல்லுவதற்கான துருப்பிடிக்காத இரும்பிலான தாங்கிகளைக் கொண்ட தாங்கிகளும் / பவுசர்களும் மற்றும் குளிரூட்டப்பட்ட ட்றக்குகள்: | | |
| | 8704.22.41 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | 8704.22.42 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆனால் பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | | --- | பிற: | | |
| | 8704.22.61 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | 8704.22.62 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆனால் பத்து வருடங்களுக்கு குறைந்தவை | TS | |
| | | --- | பாலைக் கொண்டு செல்லுவதற்கான துருப்பிடிக்காத இரும்பிலான தாங்கிகளைக் கொண்ட தாங்கிகளும் / பவுசர்களும் மற்றும் குளிரூட்டப்பட்ட ட்றக்குகள்: | | |
| | 8704.23.52 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆனால் பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS | |
| | | - | பிற,பொறிமுறை அமுக்த உள்ளக எரிநிலை ஆடு தண்டு இயந்திரங்களுடனானவை: | | |
| | 8704.31 | -- | மொத்த வாகன நிறையானது 5 தொன்களுக்கு மேற்படாதவை : | | |

| | நிரல் I<br>இ.மு தலைப்பு | நிரல் II<br>இ.மு குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் அ | நிரல் V<br>தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் ஆ |
|---|---|---|---|---|---|---|
| | | | --- | பொருட்களையும் மற்றும் நபர்கள் அமரும் அறைக் குமாக வேறாக்கப்பட்டுள்ளதுமான பிற வாகனங்கள், நபர்கள் அமரும் அறையில் பிற பாவனைக்காக மாற்றத்தக்க மேலதிக இடவசதியுடன் அல்லாத, ஓட்டுனர் அடங்கலாக 3 நபர்களை (வயதுவந்தவர்கள்) அல்லது அதற்குக் குறைந்த நபர்களுக்காக வடிவ மைக்கப்பட்டுள்ள நபர்கள் அமரும் அறை, சரக்குச் சுமையானது 2000 கி.கிராமிற்கு குறைந்தவை : | | |
| | | 8704.31.63 | ---- | வீல் தகடுகள் (லீப் ஸ்பிறிங்) முன்புறமாக பொருத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் சரக்குக் கொள்ளளவானது 800 கி.கிராம் அல்லது அதற்கு மேற்பட்டவை, நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |
| | | | --- | பாலைக் கொண்டு செல்வதற்கான துருப்பிடிக்காத இரும்பிலான தாங்கிகளைக் கொண்ட தாங்கிகளும்/ பவுசர்களும் மற்றும் குளிரூட்டி பொருத்தப்பட்ட ட்றக்குகள். | | |
| | | 8704.32.41 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |
| | | 8704.32.42 | ---- | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆனால் பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | **TS** | |
| | | | | | | |
| **201** | **87.05** | | | **பிரதானமாக நபர்களை அல்லது பொருட்களைக் கொண்டு செல்லுவதற்காக வடிவமைக்கப்பட்டவை தவிர்ந்த பிற நோக்கங்களுக்கான மோட்டார் வாக னங்கள் (உதாரணமாக-சீர்குலைந்த இயந்திரப் பொறி லொறிகள், பாரம் தூக்கும் பொறிகள், தீ அணைக்கும் வாகனங்கள், கொங்றீட் கலக்கும் லொறிகள், வீதி சுத்திகரிக்கும் லொறிகள், தெளிக்கும் லொறிகள், இடம்பெயர் வேலைத்தளங்கள், இடம் பெயர் ஊடுகதிர் அலகுகள்).** | | |
| | | 8705.10 | - | பாரம் தூக்கும் லொறிகள் | | |
| | | 8705.10.10 | --- | பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | 8705.20 | - | கொண்டு செல்லத்தகு துளையிடும் பாரந்தூக்கிகள் | | |
| | | 8705.20.10 | --- | ஏழு வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | 8705.30 | - | தீ அணைக்கும் வாகனங்கள் | | |
| | | 8705.30.10 | --- | ஏழு வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | 8705.40 | - | கொங்றீட் கலவையிடும் லொறிகள் | | |

| | நிரல் I<br><br>**இ.மு தலைப்பு** | நிரல் II<br><br>**இ.மு குறியீடு** | | நிரல் III<br><br>**விபரம்** | நிரல் IV<br><br>**தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் அ** | நிரல் V<br><br>**தற்காலிக இடைநிறுத்தம் (TS) பட்டியல் ஆ** |
|---|---|---|---|---|---|---|
| | | 8705.40.10 | --- | பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | 8705.90 | - | பிற: | | |
| | | | --- | சாக்கடை நீர்க் கழிவுகளைப் பிரித்தெடுப்பதற்கான உறிஞ்செடுக்கும் பம்பிகளைக் கொண்ட சாக்கடை பவுசர்கள் | | |
| | | 8705.90.21 | ---- | ஏழு வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | | --- | கொங்றீட் கலவையினை தள்ளும் விசைக்குழாய் கொண்ட ட்றக்குகள் | | |
| | | 8705.90.31 | ---- | பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | | **TS** |
| | | | --- | பிற: | | |
| | | 8705.90.91 | ---- | மொத்த வாகன நிறையானது 4 தொன்களுக்கு மேற்படாதவை, ஏழு வருடங்களுக்கு மேற்படாதவை **(ஏரியள் ப்ளட்போம் டிரக்குகள் தவிர)** | **TS** | |
| | | 8705.90.93 | ---- | மொத்த வாகன நிறையானது 4 தொன்களுக்கு மேற்பட்டவை, ஏழு வருடங்களுக்கு மேற்படாதவை **(ஏரியள் ப்ளட்போம் டிரக்குகள் தவிர)** | **TS** | |
| | | 8705.90.94 | ---- | மொத்த வாகன நிறையானது 4 தொன்களுக்கு மேற்பட்டவை, ஏழு வருடங்களுக்கு மேற்பட்டவை | **TS** | |

2.2 மேலே ஒழுங்கு விதி இல 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடுகள் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் அவ்வாறான பொருட்கள் இறக்குமதி தற்காலிகமாகத் தடைசெய்தல் தொடர்பான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை மீறி 2023 ஓகத்து மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னைய காலப்பகுதியில் இலங்கையின் எந்தவொரு துறைமுகம்/விமானநிலையத்திற்கு வந்தடைந்துள்ள; இதுவரை இலங்கை சுங்கத்திணைக்களத்திற்கு சுங்கவெளிப்படுத்துகையொன்றினை (சுங்கநுழைவுச் சீட்டு/சுங்கவெளிப்படுத்துகைப் பத்திரம்) சமர்ப்பிக்காத எந்தவொரு பொருள் /பொருட்தொகை, 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அரச வருமான பாதுகாப்பு (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் விதிமுறைகளின் தேவைக்காக அப் பொருட்கள்/பொருட்தொகையின் செலவு,காப்பீடு மற்றும் சரக்கு போக்குவரத்து (CIF) செலவில் 30% மேலதிகக் கட்டணமொன்றை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு செலுத்துதலின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதியின் கீழ் விடுவிப்பதற்கு இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

3. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், வணிக வங்கிகள் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு **"செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** வழங்கப்படும்.

4. மேற்படி ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழும் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதிமுடிவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.

EOG 08-0208

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.